Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 15-6-1946 ஆனிமீ 1உ { மலர் 36

## ஈரோட்டில் பெரியார் பேச்சு

26-5-46ந் தேதி ஈரோடு காரை வாய்க்கால் மைதானத்தில் தோழர் குகநாதன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டம் இரவு 10மணிக்கு மேல் துவக்கப்பட்டது. 5000 மக்கள் வரை வந்து இருந்தனர். நள்ளிரவு 1மணி வரை சொற்பொழிவுகள் நடந்தன.

பெரியார் ஈ. வெ. ரா. பேசியது

நம் கழக சார்பாக சென்றமாதம் இரு கூட்டங்கள் நடந்தன. அதற்கு பிறகு பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. 1. சென்னை மந்திரிசபை அமைப்பு. 2. இங்கிலாந்து தூது கோஷ்டி தோல்வி. 3. மதுரைக் கலவரம் முதலிய காரியங்களாகும். மந்திரி சபை அமைப்புபற்றி காங்கிரஸ் தலைவர்களுக்குள் எவ்வளவு கோளாறுகள் இருந்தாலும் நமக்கு அதைப் பற்றிக் கவலைஇல்லை. ஆனால் அதில் ஆந்திரர், தமிழர் என்கின்ற பாஷை உணர்ச்சியும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற வகுப்பு பேத உணர்ச்சியும், அன்னிய மாகாணத்தார் பிரவேசம் கூடாது என்கின்ற மாகாண உணர்ச்சியும், யார் முதல் மந்திரி, யார் சாதாரண மந்திரி என்ற பதவி வேட்டைப் போராட்டமும், காங்கிரசார் இதுவரை குறை சொல்லிவந்த மற்ற கட்சிகள் நடத்தையையே சர்வசாதாரணமாகக் காண்கிறோம். காங்கிரஸ்காரர்கள் அல்லாமல் "தேவர்களே" வந்து மந்திரிசபை நடத்தினாலும் இந்தப் போராட்டங்கள் நடந்துதான் தீரும். இது அரசியலுக்கு இயற்கையேயாகும். ஏனெனில் அரசியல் என்பது வடிகட்டிய சுயநலம், பித்தலாட்டம். ஆகவே எந்த பித்தலாட்டமும், ஏன், தெய்வீகமும் இவர்களுக்குத்தான் செல்லும். இது எப்படி இருந்தாலும் நமக்குக் கவலை இல்லை. நம்மை பொருத்தவரை நாம் இந்த மந்திரிசபையினால் நல்லது கிடைப்பதை நன்றியோடுபெற இருக்கிறோம். கேடு ஏற்பட்டால் போராடவும் பின்வாங்கப்போவதில்லை! போருக்கு தயாராகவே இருக்கிறோம்.

இந்தி வந்தால் அனுமதிப்போம் என்று நான் சொன்னதாகச் சொல்லுகிறார்கள் அது தவறு. அதைவிட முக்கிய வேலை இருக்கிறது. வந்தால் பார்த்துக்கொள்ள ஆட்கள் இருக்கிறார்கள். ஏற்படுத்திவிட்டுவிட்டோம் என்று சொன்னேன். மற்றும் நம் பேச்சுக்களில் பார்ப்பனர்களை குறைகூறியதாக சில பார்ப்பனர்கள் பேசிக்கொண்டார்களாம். அதுவும் தவறு. நாம் அவர்களைக் குறை கூறவே இல்லை. நம் குறைகளைப்பற்றி பேசினால் அது அவர்களைக் குறைகூறுவதாகக் கருதுகிறார்கள். அக்குறைகள் நீங்கும்படி சட்டம் ஏற்பட்டால் ஒழிய அல்லது அவர்கள் திருத்திக்கொண்டால் ஒழிய இந்த நிலைமை இன்னும் அதிகமாகுமே தவிர குறையப்போவதில்லை. ஆதலால் குறையையும் காரணங்களையும் சொல்லுகிறோம். இது அவர்களைத் திட்டுவதாகாது. அவர்களையும், அதாவது பார்ப்பனர்களையும், நம்மையும் பார்த்தால் நமக்கு இருந்துவரும் குறையும், இழிவும், அசௌகரியமும் எவ்வளவு இருக்கிறது? இதை அவர்களில் யார் சிந்திக்கிறார்கள்? தங்களைக் குறைகூறுவதாய்க் கருதும் பார்ப்பன சமூகம் இதற்காக என்ன செய்தது? என்ன செய்கிறது? அவர்கள் எப்போதும் அதிகாரத்தில் இருப்பவர்கள், மதத்தில் பெரியவர்கள், ஆதலால் அந்த அதிகாரத்தை, மதத்தைக்கொண்டு நம்மை எவ்வளவு பாரபட்சமாகவும், இழிவாகவும் நடத்துகிறார்கள். அவர்கள் பத்திரிகை ஆசிரியக்காரர்கள் அப்பத்திரிகைகளைக்கொண்டும் நம் மக்களை, நம் இயக்கத்தை எவ்வளவு கொடுமையாக நடத்தி இழித்துக்கூறி நம்மைத் தலையெடுக்கவிடாமல் எவ்வளவு வன்னெஞ்சமாய் அக்கிரமம் செய்கிறார்கள்? நம்மையும், நம் தலைவர்களையும், நம் ஸ்தாபனங்களையும் இழிவு படுத்தி, கரும் பழி சுமத்தி நாடெல்லாம் விஷமப்பிரசாரம் செய்கிறார்கள். மற்ற மாகாணத்தார் நம்மை இழிவாய்க் கருதுகிறார்கள். சென்னை மந்திரிசபை அமைப்பில் பிரகாசம்—ராஜகோபாலாச்சாரி கட்சி சண்டை இருந்தாலும், பிரகாசம் அவர்கள் மீது ஆச்சாரியார் கும்பலுக்கு எவ்வளவுதான் அருவருப்பும் ஆத்திரமும் இருந்தாலும், கட்சித்தலைவர் தேர்தலில் ஆச்சாரியார் கட்சியார் பிரகாசம் தலைவராக வரும்படியாகத்தான் நடந்துகொண்டார்களே தவிர முத்தரங்க முதலியார் தலைவராக வருவது பார்ப்பனர்களுக்கு சிறிதும் பிடிக்கவில்லை.

ஆச்சாரியார் கூட்டம் உண்மையில் பிரகாசம் கூடாது என்று நினைத்து இருந்தால் அவர் தலைவராக ஆகி இருக்க முடியாது. எனவே பார்ப்பனர்களுக்குள் தங்கள் தங்கள் தனிப்பட்ட காரியம் வரும்போது தான் தங்களுக்குள் போட்டியே ஒழிய பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போட்டி வரும்போது பார்ப்பனர் யாவரும் ஒன்றுதான். நாம்தான்!

"தனிப்பட்ட நமக்கு இல்லாவிட்டால் பார்ப்பனரே வரட்டும்" என்று விபீஷணர்களாக நடப்பவர்களாக இருந்து வருகிறோம்.

இன்றும் பார்ப்பன மந்திரிகள் 5 பேர்கள் ஆகிவிட்டார்கள். இன்னும் ஒருவர் வரலாம். முக்கியமான இலாக்காக்கள் பணம் கொழிக்கும் இலாக்காக்கள் யாவும் அவர்கள் இடமே தஞ்சமடைந்து விட்டது. வெறுந் தப்பட்டைகள்தான் நம்மவர்கள் இடம் அளிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி இருந்தாலும் மந்திரி சபையில் காங்கரசின் துவேஷப் புகை புகைந்துகொண்டிருக்கிறது.

இனி அடுத்தாற்போல் பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டி விஷயம். இது தோல்வி அடைந்ததில் அதிசயமென்ன? காங்கரஸ்காரர்கள் (ஆரியர்கள்) ஒருநாளும் பிரிட்டிஷாரை வெளியேற விடமாட்டார்கள். பிரிட்டிஷார் வெளியேறினால் இந்தியா முஸ்லிம் ராஜ்ஜியமாகிவிடும் என்கின்ற பயம் வடநாட்டுத் தலைவர்களுக்கு (ஆரியர்களுக்கு) உண்டு. ஏனெனில் முஸ்லிம்கள் ஒரே ஜாதி; கட்டுப்பாடுடைய ஜாதியாராவார்கள், அவர்கள் தவிர்த்த "இந்தியர்கள்" பல ஜாதி, கட்டுப்பாடு இல்லாத விபீஷணர்கள் ஜாதி. ஆதலால் கட்டுப்பாடுடைய ஒரு ஜாதிதான் அவர்கள் யாராய் இருந்தாலும் எவ்வளவு சிறு தொகையினரானாலும் இந்தியாவை ஆளமுடியும். அதனால்தான் காங்கரசார் வெள்ளையனை வெளியேற அனுமதிக்கமாட்டார்கள் என்கிறேன்.

ஆனால் "வெள்ளையனே வெளியேறு" என்று அவர்கள் மக்களை ஏமாற்ற பித்தலாட்டத்தைச்சொல்லிக்கொண்டே வெள்ளையனோடு ஒப்பந்தம் பேசிக்கொண்டு மேல் ஜாதியாரும், பணக்காரர்களுமான ஆரியர்கள் நன்றாக வாழ வழிசெய்து கொள்வார்கள். இதனால்தான் தூதுகோஷ்டி தோல்வி என்ற நடிப்பை நடத்தினார்களே ஒழிய உண்மையில் தோல்வி இல்லை. அது வெற்றி பெற்றிருந்தால் முஸ்லிம்களுக்கு பகுதி ஆதிக்கம் வந்துவிடும். இதற்கு, வர்ணாசிரமத்திற்கும் பணக்காரர்களுக்கும் பரம பக்தரான காந்தியார் சம்மதிப்பாரா? ஆகவே தூதுகோஷ்டி தோல்வி என்பது ஆரியருக்கு வெற்றியேயாகும். இனி அடுத்தாற்போல் மதுரை சம்பவ விஷயம்.

மதுரை சம்பவம் நமக்கு மொத்தத்தில் கணக்குப் பார்த்தால் சிலர் அடிபட்டாலும் பலனில் லாபமே தவிர நட்டமில்லை. நமது இயக்கமும் கருப்புச்சட்டை படை அமைப்பும், இந்தியா முழுவதும் பரவிவிட்டது. நமது கொள்கைகளும் இந்தியாவெங்கும் தெரிந்துவிட்டது. இது எதிர்பாராமல் நமக்கு கிடைத்த லாபமாகும். இதில் பார்ப்பனர்கள் ஏமாந்து போய்விட்டார்கள் என்றே சொல்லலாம். நம்மில் பலருக்கு அடி உண்டு, கஷ்ட நஷ்டமும் உண்டு; போனால் போகட்டும் இலாபம் எவ்வளவு பெரிது பாருங்கள், உருவக் கடவுள் பேரால் அவர்கள் அடிக்கும் கொள்ளைபற்றியும், ஜாதிக்கொடுமைபற்றியும் நமது அபிப்பிராயம் என்ன? கருப்புச்சட்டைப் படை நோக்கமென்ன? திராவிடக் கழக கொள்கை என்ன? என்பவை ஒருவாறு இந்தியா பூராவும் விளம்பரம் செய்யப்பட்டுவிட்டன. இவர்கள் இப்படி செய்யாதிருந்தால் இந்தக் கொள்கை பரவுவது லேசான காரியமல்ல. இதை பரப்புவதற்கு ஒரு சிலர் அடி உதை பட்டால் இழிவு அல்ல. இதற்கு ஆகவேதான் 2000 ஆண்டுகளுக்குமுன்பே புத்தர், கிறிஸ்துநாதர், முகமதுநபி ஆகிய சீர்திருத்தக்காரர்கள் பாடுபட்டார்கள். ஆனால் அது நம்நாட்டில் வெற்றி பெறவில்லை. இப்போது அதையே தான் நாம் செய்கிறோம். அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களைப்போலவே நமக்கும் கஷ்ட நஷ்டம் வந்துதான் தீரும். அதற்குப் பயப்படக்கூடாது அப்படிப்பட்ட அந்த காட்டுமிராண்டி காலத்தில், அவர்கள் இந்தியா தவிர மற்றநாடுகளில் வெற்றிபெற்றுவிட்டார்கள் என்றால் இந்த விஞ்ஞானகாலத்தில் அதே கொள்கைகளில் அதுவும் அக்கொள்கைகளில் உலகத்தில் 200கோடி மக்கள் இருக்கும்போது நாம் ஏன் வெற்றிபெறமுடியாது? மதுரை சமணர்களை கழுவேற்றின ஊரல்லவா? அதை ஆதரித்து கழுவேற்றினவர்களுக்கு முக்தி கொடுத்த சிவன் உறையும் ஊரல்லவா? அது இப்போது சிலரை கல்லால் தடியால் அடித்து, மடியில் உள்ளதைப் பிடுங்கிக்கொண்டு, போய் கொட்டகைக்கு தீ வைப்பது மதுரைக்கு எப்படி இழிவாகும்? ஆதலால் மதுரை சம்பவம்பற்றி நாம் அதிசயப்படவோ குறைகூறவோ இடமில்லை. ஏசு கோவில்களை "கள்ளர் குகை" என்றார், புத்தர் பார்ப்பனீயத்திற்கு அஸ்திவாரத்தில் வெடி வைத்தார், முகமதுநபி "விக்கிரகங்களை, கடவுளை பரிகாசம் செய்யும் சின்னம் ஆதலால் கண்ட கண்ட பக்கம் அதை வெறுங்கள்" என்றார், காந்தியார் கோவில்களை "குச்சுக்காரிகள் விடுதி" என்றார். மற்றும் பல பெரியார்கள் "கல்லிலும், மரத்திலும், செம்பிலும், காகிதத்திலும், சித்திரத்திலும் கடவுள் இருப்பதாக மடையர்களே" என்றார்கள். இதைவிடவா நாம் சொல்லுகிறோம்? இவ்வளவு கூட நாம் சொல்லுவதில்லையே, இப்படி யெல்லாமும் நாம் செய்யவில்லையே, அப்படி இருக்க இந்தப் பார்ப்பனர்கள் பழிசுமத்தி நம்மை ஒழிக்கப் பார்க்கிறார்கள். மதுரை

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

"போராட்டம்"

★

மாதம் ஒரு புத்தகம்

விரைவில் வெளிவரும்.

விலை விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்,

திருவத்திபுரம், வ. ஆ.

# பூதேவர்களின் விஷமப் பிரசார கோஷ்டியார்களின் தேவபாதுகாப்பு மாநாடு

(சித்திரபுத்ரன்)

தேசிய பத்திரிக்கை நகரத்தில், பார்ப்பன நிருபர்கள் பந்தலில், பூதேவர்கள் கழகச்சார்பில் விஷமப் பிரசாரகோஷ்டிப்படையின் சதியாலோசனை மாநாடு நடவடிக்கைகள்.

விஷயாலோசனைக் கூட்டம்.

**தலைவர்:-** நம் மாநாட்டு ஊர்வலம் வெகு வெற்றிகாமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

**வரவேற்புக் கழகத் தலைவர்:-** ஆம் ஆம், மிகமிக வெற்றிதான் யாவரும் அறியாமல், ஒருவருக்கும் தெரியாமல் நாம் தனித்தனியாய் எங்கேயோ போகிற யாரோ ஒரு அனாமதேயம்போல் நடித்து மெள்ளமெள்ள வந்து இத்தனைபேர் இந்த சதியாலோசனைக்கூட்டத்திற்கு வந்து சேர்ந்தது நமக்கு மாபெரும் வெற்றிதான்.

**தலைவர்:** சரி சந்தோஷம். மாநாட்டிற்கு முதல் தீர்மானம் என்ன?

**காரியதரிசி:** அதிகாரத்திலிருக்கும் பூதேவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியதாகும்;

**தலைவர்:** சரி அவர்களுக்கு ஆகத்தானே நாம் பாடுபடுகின்றோம், இதற்கு நன்றி செலுத்தவேண்டுமா? அவர்கள் கடமையைத்தானே அவர்கள் செய்கிறார்கள்?

**கா-சி:** இருந்தாலும் நாம் நன்றி செலுத்தினால் இன்னும் அதிகமாக அக்கிரமங்கள், அநியாயங்களின் செய்து நமக்கு உதவி செய்வதோடு நல்ல யோசனையும் சொல்லி உற்சாகப் படுத்துவார்கள். நம் ஆதரவு பூரணமாக இருக்கிறது என்று எண்ணமும் செய்து நம் எதிரிகளை அழித்துவிடுவார்கள். அந்தக்காலத்தில் நமக்கு விஷ்ணு, இந்திரன் இருந்ததுபோல் தானே இந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியும், நம் அதிகாரிகளும் இருந்து வருகிறார்கள். ஆகலால் செய்யும் யாகம், எக்கியம் என்பவைகளான பத்திரிகை பித்தலாட்டம், விஷமத்தனம் ஆகியவைகளால் அரசாங்கத்தாரும் நம் அதிகாரிகளும் காப்பார்கள். ஆதலால் அவர்களுக்கு நம் ஆதரவு காட்டும் முறையில் நன்றி காட்டவேண்டியது முதல் தீர்மானமாகும்;

**தலைவர்:** சரி இதை நானே பிரேரேபித்து விடுகிறேன். இனி அடுத்தத் தீர்மானம்?

**காரியதரிசி:** பத்திரிக்கைக்காரர்கள் கட்டுப்பாடாய் எதிரிகள் நடவடிக்கைகளை அவர்கள் அனுப்பும் சேதிகளை அறவே பிரசுரிக்கக் கூடாது, அப்படி மீறி பொதுஜனங்களுக்கு பயந்து பிரசுரித்தாலும் நம் எதிரிகள் இதையேண்டா இவன் போட்டான் என்று அவர்கள் வருத்தப்படும் மாதிரியில், அவர்களுக்கு கேடுவரும் மாதிரியில் பிரசுரிக்க வேண்டும் என்று பத்திராதிபர்களை கேட்டுக்கொள்வதாகும்.

**தலைவர்:** இப்படித்தானே இப்போது நடக்கிறது. இதை மறுபடியும் அவர்களுக்குச் சொல்லுவதெதற்கு? ஒரு சமயம் அவர்கள் இதுவரை செய்து வருவதை நாம் அறியாமல் இருக்கிறோம் என்று நினைத்து இதனால் வருத்தப்பட்டால் என்ன செய்வது?

**வா-தலை:** வருத்தம் ஒன்றும் ஏற்படாது இன்னும் சிறிது சுறுசுறுப்பாய் வேலை நடக்கும் எதிரி நடவடிக்கைகளை கொன்று தீர்த்து விடுவார்கள். அனுமதியுங்கள்.

**தலை:** சரி இதை வரவேற்பு தலைவர் பிரரேபிக்கட்டும், காரியதரிசி ஆமோதிக்கட்டும். இனி அடுத்தத் தீர்மானம்?

**ஆலவாய் கதை தேவர்:** அடுத்த தீர்மானமாக நான் "பத்திரிகை நிருபர்கள் நம் நோக்கங்களுக்கு, நலன்களுக்கு ஏற்பவும், நம் எதிரிகளுக்கு கேடுகள், கெட்ட பெயர்கள் ஏற்படவும், கலகம் விளைவிக்காத நம் இயக்க தோழர்கள் இருக்கும் இடத்திலும் கலகம் நடக்கும்படி தூண்டிவிடவும், எங்கும் காலித்தனம் தாண்டவமாடவும், அதுவே பாரதமாதா சேவை, தேசியத் தொண்டு, காங்கிரஸ் பக்தர்கள் கடமை என்று கருதும்படியாகவும் அவ்வளவு திரித்து, கற்பித்து சேதிகள் விடவேண்டும், பிரசுரிக்கவேண்டும் என்று ஆசிரியர் நிருபர் எனையே ரிபோர்டர்களை கேட்டுக்கொள்ளுகிறது" என்ற தீர்மானமாகும். இதன்மீது நான் சிறிது பேசுகிறேன். அதாவது இந்த காரியத்தால் அல்லாது தேவர்களாகிய நாம் இனி வாழ முடியாது, எதிரிகள் வலுத்துவிட்டார்கள். அவர்கள் மக்களை வசப்படுத்திக்கொண்டார்கள். தனிப்பட்டமுறையில் எதிரிகள் எதுவும் செய்ய சக்தி உடையவர்கள் ஆகிவிட்டார்கள். நாம் தனியே நடக்க பயப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்போதைய விபீஷணர்களுக்கு அனுமார்களும்கூட முன் காலத்தவர்களைப் போல அல்ல, நம்மைவைத்துப் பலன் அடைவதற்கே நம்மிடம் பக்தி காட்டுகிறவர்கள்போல் நடக்கிறார்கள். எனவே நம்மை இனி நம் பத்திரிக்கைக்காரர்கள்தான் காப்பாற்றவேண்டும். நம் தந்திரங்கள், சூட்சிகள் தான் நமக்கு சுதிமோட்சம் கொடுக்கக்கூடியவை, ஆகவே இதை அவர்கள் உணரவேண்டும்.

**தலைவர்:** இதை நீங்களே பிரரேபியுங்கள். ஆசிரியர், நிருபர், பத்திரிகை சொந்தக்காரர்கள் வந்திருக்கிறார்களா?

**காரி:** ஆம்.

**தலை:** சரி அடுத்தது.

**கணநாதர்:** நம் அதிகாரிகள் சிறிதும் தயவு தாட்சண்யம் பார்க்காது கல்நெஞ்சத்துடன் காரியம் பார்த்து நம் எதிரிகளின் ஸ்தாபனங்களை அழிக்கவேண்டும் என்கின்ற தீர்மானத்தை நான் பிரரேபிக்கிறேன்.

**தலை:** இனி இப்படி தனித்தனி தீர்மானம் வேண்டாம் நம்மவர்கள் அதிகாரிகள் மனுதர்ம சாஸ்திரம், பாராசர ஸ்மிருதி, இராமாயண பாரதம், புராணம் ஆகியவைகளில் இராட்சதர், அசுரர் என்பவர்களை அழிக்க பிராமணர்கள் தேவர்கள் என்பவர்கள் எப்படி எப்படி நடந்தார்களோ அப்படி அப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டால் போதும்.

மற்றவர்கள் ஏகோபித்து: சரி சரி ரொம்பவும் விளக்கமாகிவிட்டது. இது பத்திரிகைகாரர், அதிகாரிகள் ஆகியவர்களுக்கு மாத்திரம் அல்ல தேவர்கள் யாவருக்குமே பொருந்தியதாகும்.

**தலைவர்:** சரி விஷயாலோசனை கமிட்டிக்கூட்டம் ஒத்திப் போடப் போடப்பட்டது. இவை பொதுமாநாட்டில் முடிவு செய்தபின் மற்றவை.

குடி அரசு

1946-ஆம் ஜூன்-மீ 15உ

# இன்று இந்தியா

இன்றைய இந்தியா எங்கும் இனம், மதம், ஜாதி, வகுப்பு உள் வகுப்பு, மேல்ஜாதி, முதலாளி, தொழிலாளி என்கின்ற வகைகளான பிரிவுகளின் போராட்டமாகவே காணப்படுகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு எல்லை எங்கு என்று தெரியமுடியாத அளவுக்கு மயக்கத்தைக் கொடுக்கும்படியான போராட்டங்களாகவும் இருக்கின்றன.

இந்த நிலையில் வெள்ளையர் (பிரிட்டிஷார்) வெளியேறுவதும் இங்கேயே இன்னும் சிறிதுகாலம் இருப்பதும் இரண்டும் அவ்வளவு பிரமாதமாக கவலைப்படக்கூடிய சங்கதி அல்ல என்றே கருதக்கூடியதாய் இருக்கின்றன.

இந்து, முஸ்லிம் என்கின்ற தான மதத்தலைப்பின்மீது நடந்துவரும் போராட்டத்தை எப்படி சாந்தப்படுத்துவது என்பதற்கு இதுவரை யாரும் வழி சொல்லவில்லை. அதை அதிகப்படுத்தும் கைங்கரியம் செய்கிறவர்களே வீரர்களாய், மகான்களாய், தேசபக்தர்களாய், தேசத் தலைவர்களாய் கருதப்படுகிறார்கள்.

இந்தப் போராட்டம் ஒழியாவிட்டால் இந்தியாவுக்கு சாந்தி எங்கே? சமாதானம் எங்கே? முன்னேற்றகரமான வாழ்வெங்கே ஏற்படக்கூடும்.

சம சக்தி உள்ள இரண்டு பிரிவுகள் உள்ள இடத்தில் கலகம் ஏற்பட, வளர, இடம் பெரிதும் இருப்பதில்லை. இந்தியாவில் இந்து, முஸ்லிம் என்பது சம சக்தியாய் இல்லை, இந்துக்கள் எண்ணிக்கையில் அதிகம், முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறைவு. ஆனால் இந்துக்கள் கட்டுப்பாட்டில், ஒற்றுமையில், இனக் கவலையில், மதக் கவலையில், மிகவும் மோசமானவர்கள், முஸ்லிம்களோ கட்டுப்பாட்டில், ஒற்றுமையில், இனக் கவலையில், மதவுணர்ச்சியில் மிகவும் கெட்டி உள்ளவர்கள்.

ஆதலால் இந்துக்கள் ஜனத்தொகையில் அதிகமாக இருந்தாலும் வலுவற்றவர்களாகவும், முஸ்லிம்கள் ஜன எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் வலுவுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

எதுபோலென்றால் இங்கு நம் தமிழ்நாட்டிலேயே எவ்வளவு குறைந்த தொகையுள்ள பார்ப்பனர்கள் எவ்வளவு அதிக எண்ணிக்கையுள்ள திராவிடரை (பார்ப்பனரல்லாதரை) அடக்கி ஒடுக்கி இழிவுபடுத்தி கீழ்ஜாதி ஆக்கி ஆதிக்கம் செலுத்துகிறார்களோ அதுபோல் அதே காரணத்தால் இந்துக்களைவிட பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த நிலை எந்தக்காலத்துக்கும் மாறி சம பல நிலைக்கு வர இந்துக்கள் அமைப்பு இடமில்லாததாகவே இருக்கிறது.

இனத் தன்மையும் மற்ற ஜீவப்பிராணிகளின் தன்மைபோல் ஒரு இனத்தை ஒரு இனம் உண்ணும் தன்மையில் இருந்து வருகிறது. இதனாலும் இந்தியா உள்ள அளவும் இன பேதம் இருந்துதான் தீரும் என்று பயப்படவேண்டி இருக்கிறது.

ஜாதி, வகுப்பு, உள் வகுப்பு என்பவைகள் ஆபாசமானதும் மெத்த அறிவீனமானதுமான தன்மையில் அமைந்து அவை பாதுகாக்கப்பட கடவுள், மதம், சாஸ்திரம், என்பவைகளில் நல்ல இடம்பெற்றுவிட்டன. அதோடு கூடவே இவற்றின் பேரால் நிலைத்த வாழ்வும், வலிமையும், ஏற்பட்டு அவர்கள் ஒரு பிறவி ஜாதியார்களாகவே அந்த வலுவைக்கொண்டு பிரச்சாரம் கட்டுப்பாடாக செய்து வந்து அதற்கு எதிரான எப்பேர்ப்பட்ட முயற்சியையும் அழித்துவிடுகிறார்கள்.

இவை தவிர பொருளாதாரத் தன்மையில் முதலாளி பாட்டாளி என்கின்ற பிரிவும் மக்களிடத்தில் மக்களுக்குள் ஒற்றுமை, அன்பு ஏற்பட, வளர இடமில்லாமல் குரங்காட்டிக்கும் குரங்குக்கும் உள்ள சம்பந்தம்போல் ஒருவருக்கொருவர் உஷாராய்ப் பிழைக்கவேண்டி இருக்கின்றது. இது மாத்திரம் "எல்லா நாட்டிலும் இருக்கிறதுதானே" என்று சமாதானம் சொல்லப்பட்டாலும் மற்ற மேலே கண்டவைகள் இந்தியாவில் மாத்திரம் இருந்துகொண்டு இவைகள்பற்றிய ஒரு மாபெரும் போராட்ட உருவமாகவே இந்தியா காட்சி அளிக்கிறது.

இந்தக் கேடுகள் எதனால் நீக்கப்படமுடியும்? பணத்தால் முடியுமா? படித்தால் முடியுமா? சுதந்திரமடைந்தால் முடியுமா? உடலை கசரத் செய்து பலம் ஏற்படுத்திக்கொண்டால் முடியுமா? வெள்ளையர் போய்விட்டால் முடியுமா? மந்திரியாய் இருந்தால் முடியுமா என்பது விளங்கவில்லை.

யாவரும் ஒரு சமுதாயம், ஒரு மதம் என்று ஆகிவிட்டாலும், ஒரு மதத்தார், ஒரு சமுதாயத்தார், ஒரு இனத்தார் என்பவர்களாவது தங்களுக்குள் கீழ் மேல் தன்மை இல்லாமல் (உதாரணமாக முஸ்லிம்களைப் போல்) ஒரு சம சமுதாயமாக இருக்கவேண்டாமா?

அதற்குத் திட்டமும் இடமும் இல்லாத தொண்டினால், ஸ்தாபனத்தால், தலைவர்களால், இந்தியாவுக்கு எந்தவிதத்தில் முன்னேற்றத் தொண்டு நடத்த

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 15-6-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 47,387

இம்மாதம் 15உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 8041 | 7. சென்னை இவ்வாண்டில் 1362 | 3232 |
| 2. தஞ்சை | 7824 | 8. இராமநாதபுரம் | 2958 |
| 3. கோவை | 6459 | 9. தென் ஆற்காடு | 2553 |
| 4. திருச்சி | 5546 | 10. மதுரை | 1913 |
| 6. வடஆற்காடு | 3538 | 11. செங்கல்பட்டு | 1000 |
| 5. திருநெல்வேலி | 3448 | 12. மற்ற இடங்களில் | 875 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

---

முடியும்; எந்த விதத்தில் பயன் பெற முடியும்?

ஆஸ்திக நாஸ்திகத்திற்கு இதில் பேச்சு எங்கே இருக்கிறது? கடவுள்—மதம்—சாஸ்திரம்—கடவுள் செய்கை என்பவைகளுக்கு இதில் பேச்சு எங்கே இருக்கமுடியும்?

இவைகளைக் கொண்டுவந்து குறுக்கே போடுவது என்பது இந்தக் குறைபாடுகளுக்குஆக செய்யப்படும் பரிகாரங்களுக்கு கேடு செய்வதற்கல்லாமல் வேறு எதற்கு இருக்கமுடியும்?

மக்கள் பாடுபடுகிறார்கள். சரியோ, தப்போ ஏராளமான மலைபோல் பணம் குவியும் படியான வரி கொடுக்கிறார்கள். இதில் சிலர் ரசவாதம் போல் சம்பளம் வரும்படி பெற்று போக வாழ்வு வாழ்கிறார்கள். வரிப்பணங்கொடுக்கும் மக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட பலன் என்ன? மரியாதை என்ன?

சோம்பேரிகள் உண்டு. களித்து புளி எப்பம் விட்டதல்லாமல் நடந்தது என்ன? பலஜாதி ஏன்? பல மதம் ஏன்? பல கடவுள்கள் ஏன்? அவற்றிற்குப்பல படைப்பு, பல மனைவி, பல மக்கள் ஏன் என்றால் கோபம் ஏன்?

கடவுள்களை பிரபுக்களாக ஆக்கி, அவைகளுக்கு மாட மாளிகை கூட கோபுரம் கட்டி வைத்து, மனைவி மக்கள், வாகனங்கள், நகை வேலி, போகபோக்கியங்கள் நடத்தி வைத்து அந்த கடவுளின் மக்களை அதுவும் மேற்கண்ட போகபோக்கியத்துக்கு உதவின மக்களை பிரித்துவைத்து இழிவு படுத்தி, எய்த்து, வஞ்சகர்கள் வாழ்வு நடத்துவதை எந்தக் கடவுள் தத்துவமாகும்?

இது தப்பு, முட்டாள்தனம், காட்டுமிராண்டித் தன்மை என்றால் இதற்குப்பதில் காலித்தனந்தானா? விஷமப்பிரசாரம் தானா? இந்தப்படி இந்தியா இனியும் எத்தனை காலத்திற்கு இருப்பது.

ஆங்கிலேயன் வெளியேறி விட்டால் இந்தமாதிரியான மக்கள் தங்கள் நாட்டை, தங்கள் சமூகத்தை தாங்களே ஆண்டு கொள்ள முடியும் என்பது "வேப்ப எண்ணெய் இனிக்கும், சுகந்த வாசனை கொடுக்கும்" "நெருப்பைத் தொட்டால் ஜில் மாதிரி இருக்கும்", என்ற தன்மைபோல் அல்லாமல் மற்ற படி அதில் என்ன உண்மை இருக்கமுடியும்?

இந்தக் கேடுகளை ஒழிக்க மக்கள் எப்போது கிளர்ச்சி செய்வது? இளைஞர்கள், மாணவர்கள் என்று வெளிக்கிளம்புவது?

இந்தத் தொண்டுகளை அலட்சியப்படுத்திவிட்டு வெள்ளையனை விரட்டுவது என்பதும், முஸ்லிம்களை அடக்குவது என்பதும், உண்மையில் சிந்திக்கக் கூடிய காரியமாகுமா?

இன்று தேசியப் பத்திரிக்கைகளின் வேலையும், ஆங்காங்குள்ள பார்ப்பனப் பிரமுகர்களின் வேலையும், இதற்குஆக செய்யப்பட்டுவரும் தொண்டுகளை அழித்து தொண்டர்களை ஒழிப்பதேயாகும்.

இதை நம்பலாமா? இவர்களோடு சேரலாமா? ஒத்துழைக்கலாமா? பணம் பெரிதா, மந்திரி காரியதரிசி பெரிதா? அப்ப... மிய பெரிது என்று உலக... முக்குப்படி கருதப்பட்டாலும் அந்தப்பதவியைக்கொண்டு மதிமானம் உள்ளவர்கள் செய்ய வேண்டியது என்ன?

குறிப்பு:- பெரியார் சென்ற வார சுற்றுப்பிரயாணத்தில் திருக்கோவிலூர், திருவத்திபுரம், திருவண்ணாமலை ஆகி... இடங்களில் பேசிய பேச்சி... சிந்தியவைகள். இதையே இ... வாரத் தலையங்கமாக்கி... டோம். (ப...

## அனுப்பப்பட்டு விட்ட...

இதுவரையும் இவ்விடம் வந்த... செய்திகள் சென்னை "விடுதலை" ஆபீசுக்கு அனுப்பப்பட்டு விட்டது:

அனுப்பவேண்டாம்

தயவுசெய்து இனி செய்திகள், மாணவர் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் கூட, இவ்விடம் அனுப்பவேண்டாம். குடி அரசு முற்றும் கட்டுரைகளாக வெளியாயிருப்பதால் செய்திகள் இனி வெளிவராது.

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

### தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: சிறுவன் வீரமணி, புலவர் வேணுகோபால், இரா. இளவரி, இராவணன் ஆகியோர்.

16-6-46 பட்டுக்கோட்டை
17— சங்கம் படுத்தான்காடு
18— ஒவையக்குன்னம்
19— பெரியகோட்டை
20— மதுக்கூர்

### தென்னார்க்காடு மாவட்டம்

தோழர்கள் புலவர் மாணிக்கம், அவர்கள் தலைமையில் புலவர் தியாகராசன், சொ. குப்புசாமி ஆகியோர் பிரசாரஞ்செய்து வருகின்றனர்.

16— திட்டக்குடி (ஆண்டுவிழா)
17— திண்டிவனம்
18— காவேரிப்பாக்கம்
19— தாராபுரம்
20— இரெட்டணை
21— கோவடி
22— ஒலக்கூர்

காலமின்மையால் மற்ற தஞ்சை தென்னார்க்காடு சுற்றுப்பிரயாணங்கள் இத்துடன் நிறுத்தவேண்டியதாகிறது. எனைய ஊர் தோழர்கள் இம்முறை மன்னித்தருள்க.

### நடக்க இருப்பவை

◉ தோழர் என். வி. நடராசன் தலைமையில் 16-6-46 காலை 8-30 மணிக்கு சென்னை பி. சம்பந்தன்—கே. சிவகாமி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

◉ அரவக்குறிச்சி பிரைமரி முஸ்லிம் லீக் சிறப்புக்கூட்டம் 28-6-46ல் நடைபெறும். பெரியார் ஈ.வெ.ரா., நெடுஞ்செழியன் முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

### வேண்டுகோள்

மதுரை கருப்புச்சட்டைப்படை மாநாட்டின் டிக்கட்டுகள் விற்பனைக்குப்பெற்ற தோழர்கள் விற்பனை விபரத்துடன் பணத்தை உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறார்கள்.

முகவரி:
தோழர் எம். என். முத்தையா,
R. D. 47 ரேஷன் ஷாப்,
324, புதுஜெயில் ரோடு, மதுரை.

### பழனிவேல் ஹாஸ்டல் காட்டுப்புத்தூர்

திருச்சி ஜில்லா, முசிறிதாலுக்கா, மிட்டா காட்டுப்புத்தூரில் தாழ்த்தப்பட்ட (ஹரிஜன்ஸ்) ஏழை மாணவர்களுக்கென ஓர் ஹாஸ்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நான்காம் வகுப்புக்கு மேற்பட்டு 6வது பாரம் (S. S. L. C) வரையிலும் எடுக்கப்படும். இடம் குறுகி இருப்பதால் ஷை ஹாஸ்டலில் சேர விரும்பும் மாணவர்கள் தன் பெயர், தகப்பனார் பெயர், ஜாதி, சொந்த ஊர், பிறந்த தேதி (பள்ளிக்கூட வயது), தன் கிராமத்திற்கு அருகிலுள்ள ஹைஸ்கூல் தூரம், கடந்த ஆண்டு தேர்தலின் முடிவு (மார்க்குகள் உட்பட) விவரம், தன் குடும்ப வருட வருமானம் (கி. மு. விடமிருந்து) இவைகளடங்கிய விண்ணப்பம் ஒன்றை கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

எம். பி. குமாரசாமி, காரியதரிசி.

விலாசம்:-
காரியதரிசி,
பழனிவேல் ஹாஸ்டல்,
C/o கே. பி. காத்தமுத்து,
காட்டுப்புத்தூர் (கிழக்குவீதி),
(Via) மாயனூர், திருச்சி ஜில்லா.

### மதுரையில் கொடியேற்றுவிழா

மதுரை சந்தப்பேட்டை அண்ணாதுரை வாசகசாலைக் கருகில் உள்ள பெரிய மரத்தின்மீது 26-5-46காலை 9மணிக்கு திராவிடர் கழக கொடியேற்றுவிக்கப்பட்டது. பெருவாரியாக மக்கள் கூடினர். கருப்புச்சட்டைத் தொண்டர்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சலில்லாதவாறு கூட்டத்தை ஒழுங்குபடுத்தினார். மேலும் தோழர் டி. வி. தங்கராஜ் வீட்டு மாடியிலும் ஒரு கொடி யேற்றப்பட்டது.

### மாணவர் கூட்டம்

21-5-46ல் உடுமலை திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது, 5000 மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். தோழர் கே. எ. மதியழகன் தலைமை வகித்தார். தோழர்கள் கே. அன்பழகன், எ. பி. சனார்த்தனம், காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் பேசினர். திராவிட மாணவர் எழுச்சி பாராட்டுக்குரியது.

### கழகம் அமைத்தார்கள்

19-5-46ல் சேலம் செவ்வாய்ப்பேட்டை அர்த்தனாரி செட்டித் தெருவில் கே. எஸ். ஸ்டாலின் செயலாளராகவும், பி. வி. ஜெய்க்கர் பொருளாளராகவும் கொண்ட திராவிட சிறுவர் கழகம் நிறுவப்பெற்றது.

o o

•பெங்களூர் உப்புமாநகரில் 12-5-46ல திராவிட கழகத்துக்கு தோழர்கள் வேலாயுதம், குன்னப்பன், அப்பாதுரை, பாலகிருட்டினன் முனுசாமி, சின்னப்பன் ஆகியோர் முறையே தலைவர், துணைத்தலைவர் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று செயற்குழுவும் நிறுவப்பெற்றது.

பட்டுக்கோட்டை டவுன் திராவிடர் கழகத்திற்கு புதிய ஆண்டிற்கு தோழர்கள் பி. சதாசிவம், ம. முகம்மது மீராசாகிபு, இ. சுப்பிரமணியம் ஆகியோரை முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளராகக் கொண்ட நிர்வாகக்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### திருத்தம்

வளையாம்பட்டு திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் அ நல்லசாமி தலைவராகவும், தங்கவேல் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முன் தவறுதலாக பெயர்கள் வெளியிட்டமைக்கு வருந்துகிறோம்.

### வாழ்க்கை ஒப்பந்தங்கள்

3-6-46ல் கடலூர் சிவானந்தபுரத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் சீதாலட்சுமி—சண்முகம், தனலட்சுமி—இராமசாமி ஆகியவர்கள் திருமணங்கள் நடைபெற்றன. தோழர் எ. சித்தையன் சீர்திருத்த திருமணம்பற்றி சொற்பொழிவாற்றினார். திருமணங்களை முன்னிட்டு குடியரசுக்கு நன்கொடையாக ரூ 5. வரப்பெற்றோம்.

o o

3-6-46ல் சனியூரில் தோழர் கே. எ. முருகேசன் அவர்கள் தலைமையில் கா. சுப்பிரமணியம்—சீதையம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் எ. என். துரைசாமி, சிவந்தசாமி சொற்பொழிவாற்றினர். திருமணத்தின் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காலித்தனத்திற்கு அஸ்திவாரம் பிறப்பிடம் தோழர் வைத்தியநாதய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனரின் மூளையும், பணமும், ஆத்திரமும், என்பதாக அப்போதே மக்கள் என்னிடம் சொன்னார்கள். நான் முதலில் நம்பவில்லை. பிறகு அவரே அவரது தந்திரமான நடத்தையில் அதை வெளியாக்கிக்கொண்டுவிட்டார். பிறகும் எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்தன. இந்தப் பார்ப்பனர், பார்ப்பனரில் யோக்கியர் என்று சொல்லப்படுபவர். இவர் சங்கதி இப்படியானால் மற்றவர்கள் எப்படி இருப்பார்கள். மதுரையில் நான் நம் தொண்டர்களை அடக்கிவிட்டதால் நமக்கு அடிவிழ நேரிட்டதென்றும், விட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காதென்றும் நம் பிள்ளைகள் என்மீது குற்றம் சொல்லுகிறார்கள். நான் விட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? இன்னும் சிலர் இரு பக்கத்திலும் செத்திருப்பார்கள். இதனால் நமக்கு என்ன லாபம்? நம்மவர்கள்தானே இருபக்கமும் அடிபட்டு சாகவேண்டி இருக்கும். ஆதலாலேயே நான் எங்கு சென்றாலும் நம்மவர்களை அடக்குவதும், பலாத்காரம் கூடாது என்பதுமாகுமே தவிர பயத்தால் அல்ல. காங்கிரசானாலும், கம்யூனிஸ்ட் ஆனாலும் அவர்களில் நம்மவர்கள் என்றால், நாம் சற்று அடங்கி மரியாதையாய் நடந்துகொள்ளவேண்டும். அதுதான் நாகரீகமாகும். இனி எந்த கட்சி ஆனாலும் நம்மவர்களுக்குள் சண்டை, கலகம், விசவு கூடாது.

கருப்புச்சட்டைப் படைக்கு இது முக்கிய கவனமாக இருக்கவேண்டும். அவர்களிடம் சிநேகம் கொள்ளுங்கள். இந்தப்புத்தி இல்லாததாலேயே பொது எதிரியை மறந்து அவனுக்கு மானங்கெட்ட அடிமையாகிவிட்டோம். இதைத்தான் மதுரையில் முதல்நாள் கூட்டத்தில் வலியுறுத்திப் பேசி இருக்கிறேன்.

இப்போது மந்திரிசபை பார்ப்பன ஆதிக்கமாகிவிட்டது. சர்க்கார் காரியாலயம் பெரிதும் அத்தனையே பார்ப்பன அக்கிரகாரம், வெளி ஐ.சி.எஸ். அதிகாரிகள், ஜட்ஜுகள், பெரிதும் பார்ப்பனர்கள். நம்மவர்களிலும் பலர் அவர்கள் அடிமைகள், பத்திரிகைகளும் யாவும் அவர்களுடையதும் அவர்களது ஆதிக்கத்தில் இருப்பதுமாகும். நம் மந்திரிகள், நம் அதிகாரிகள் யாராவது (திராவிடர்கள்) இருந்தால் அவர்கள் சக்தி அற்றவர்கள், ஆதரவற்றவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவே பாதநீர்த்தம் அருந்தவேண்டியவர்கள் இந்த நிலையில் நாம் இப்போது நான் செய்வதற்கு மேல் என்ன செய்யமுடியும்? இருக்கும் சக்தியையும், மூஸ்தீபு சாதனங்களையும் வைத்துக்கொண்டு எவ்வளவு செய்ய முடியுமோ அதற்கு மேலேயே செய்வேனே ஒழிய விட்டுக்கொடுத்துவிடமாட்டேன். மாணவர்கள், இளைஞர்கள், சில பெரியார்களிடத்தில் எனக்கு உள்ள நம்பிக்கையையும் அவர்களுக்கு என்னிடத்தில் உள்ள அன்பையும் கொண்டு நம் முக்கிய குறைபாடுகளை நீக்கி நமக்குள் ஒரு ஒற்றுமை ஏற்படவே நான் திட்டம் வைத்திருக்கிறேன். அது நடைபெற, வெற்றிபெற, நீங்கள் கட்டுப்பாடாக, குயுக்தி இல்லாமல், உங்கள் சவுகரியத்திற்கு ஆக காரியங்களையே தேடுக்கப் பார்க்காமல், எனக்கு உதவி செய்யுங்கள். பொறுமையாய் கண்ணியமாய், ஒழுக்கமாய், ஒழுங்கு முறைப்படி நடந்துகொள்ளுங்கள். வெற்றி நம்முடையதுதான். சந்தேகமில்லை.

## கருணை காட்டுக!

16-5-46ல் சென்னை நீதி மந்திரி அவர்கட்கு கிருஷ்ணன்—பாகவதர் ஆகிய கலைமணிகள்மீது கருணை காட்டி விடுதலை செய்யும்படி இந்துஸ்தான் ஆகாயவிமான தொழிற்சாலையைச் சார்ந்த தோழர் டி. ஜான்பீட்டர் அவர்களால் தந்தியனுப்பப்பட்டுள்ளது.

o o

12-5-46ல் திருவண்ணாமலையில் தோழர் என். அண்ணாமலைப் பிள்ளை எம். எல். ஏ. தலைமையில் நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலைமணிகளுக்கு கருணைகாட்டி விடுதலை வேண்டுமென பலர் சொற்பொழிவாற்றினார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாய் தீர்மானிக்கப்பட்டது.

10-5-46ல் திருவண்ணாமலை திராவிடர்கழகப் பொதுக்கூட்டத்தில் டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இயக்கச் செய்திகள்

பட்டுக்கோட்டை திராவிட மாணவர் கழக மூன்றாவது ஆண்டுவிழா 7-5-46 அன்று தோழர் க. அன்பழகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் சம்பத், சனார்த்தனம், இளம்வழுதி, புலவர் மாணிக்கம், டேவிஸ், மங்கையர்க்கரசி ஆகியோர் உரையாற்றினர். மறைந்த சிங்காரவேலருக்கு அனுதாபமும், கலைவாணர்கள் பாகவதர்—கிருஷ்ணனுக்கு கருணை வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காலையில் நடந்த கருப்புச்சட்டைப்படை ஊர்வலத்தின்போது பல இடங்களில் கொடி யேற்றப்பட்டது.

o o

பேராவூரணி திராவிட கழக முதலாம் ஆண்டுவிழா 8-5-46ல் தோழர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சனார்த்தனம், சம்பத், நீடாமங்கலம் சாவனன், காளியப்பன், இளம்வழுதி, டேவிஸ் ஆகியோர் விளக்கவுரையாற்றினர்.

o o

9-5-46ல் சமுத்திரம் ஆதித்திராவிட சங்க சார்பில் தோழர் கந்தப்பன் தலைமையில் நடந்த கூட்டத்தில் மாணவத் தோழர்கள் நா. ரங்கன், நடராசன், மாணதயன் ஆகியோர் பேசினர். தோழர் சுந்தரம் நன்றி கூறினார்.

o o

7-5-46ல் பட்டுக்கோட்டையில் தோழர் எ. பி. காளியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழியர் மங்கையர்க்கரசி, தோழர்கள் சம்பத், அன்பழகன், சனார்த்தனம், இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

அரவக்குறிச்சியில் திராவிட இளைஞர் வாசகசாலையின் சார்பில் தோழர் சுல்தான்ஷா தலைமையில் தோழர்கள் சனார்த்தனம் குமாரவேலு, உசேன், குழந்தைசாமி ஆகியோர் பேசினர்.

8-6-46 கணியூர் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் கே. எஸ். பாலா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எ. மதியழகன், நபீனார் முகம்மது, அங்கமுத்து ஆகியோர் பேசினர்.

# சென்னை நகரில் திராவிட மாணவர் பிரசாரம்

சென்னை நகரில் 29-4-46 முதல் 10-5-46 வரை கீழ்க்கண்ட விவரப்படி திராவிட மாணவர் பிரசாரம் நடைபெற்றது.

29-4-46 மாலை பெத்துநாயக்கன் பேட்டைத் திராவிடர் கழக ஆதரவில் சிவஞானம் பார்க்கில், தோழர் எஸ். கே. சாமி தலைமையில் நடைபெற்றது. புலவர் தியாகராசன், எ. பி. ஜனார்த்தனம், என். வி. நடராசன், எம். நடேசன், மதார் சாயபு மற்றும் பலர் பேசினர்.

30-4-46 சிந்தாதிரிப்பேட்டை திராவிடர் கழக ஆதரவில் நேப்பியர் பார்க்கில் பொதுக்கூட்டம் தோழர் சனார்த்தனம் தலைமையில். மாணவத்தோழர்கள் தியாகராசன், ஈரோடு அப்பாவு, ஈ. வி. கே. செல்லம், இராமானுசம், சங்கரையா, கோவிந்தசாமி மற்றும் பலர் பேசினர்.

1-5-46ல் ஜில்லா திராவிடர் கழகம்—திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுக்கூட்டம் (மே தினம்) புலவர் பு. செல்வராஜ் தலைமையில் தளபதி அண்ணாதுரை, சம்பத், சனார்த்தனம், மாணவர்கள் தியாகராசன், அப்பாவு பேசினர்.

2-5-46 மவுண்ட்ரோட் திராவிடர் கழக ஆதரவில், எல்லிஸ்ரோட் பாலமுத்து தலைமையில் பொதுக்கூட்டம். தோழர் எ. எ. கபாலமூர்த்தி தலைமையில், தோழர்கள் அன்பழகன், நடராசன், கேசவன், தியாகராசன் பேசினர். இடையே காங்கிரஸ்காரரால் குழப்பம் விளைவிக்கப்பட்டு, பின்னர் மேலும் கூட்டம் நடைபெற்றது.

3-5-46 (இரண்டு கூட்டங்கள்) நுங்கம்பாக்கம் திராவிடர் கழகம், நுங்கம்பாக்கம் ஏரியில் பொதுக்கூட்டம். தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில், தோழர்கள் கனகபாண்டியன், அப்பாவு ஆகியவர்கள் பேசினர். இராயபுரம் திராவிடர் கழக ஆதரவில் மீனாட்சியம்மன் பேட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம். தோழர் டி. வி. சுந்தரமூர்த்தி தலைமையில் தியாகராசன், செல்வன், சுப்ரமண்யம், பழனிச்சாமி, எஸ். ஆர். சாண்டோ, சங்கரய்யா பேசினர்.

4-5-46 மாலை ஆலந்தூர் திராவிடர் கழகத் திறப்புவிழா ஆலந்தூர் தர்மராஜா கோயில் எதிரில். தோழர் D. T. அரசு தலைமை வகித்தார். தோழர் சம்பத் கழகத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் அப்பாவு, நடராசன் பேசினர்.

5-5-46 தியாகராயநகர் திராவிடர் மாநாட்டில் மாணவத்தோழர்கள் தியாகராசன், அப்பாவு, இராமானுசம் ஆகியவர்கள் பேசினர்.

6-5-46 மேற்குசென்னை திராவிடர் கழகம், பெரம்பூர் மங்கலபுரம் மைதானத்தில் தோழர் டி.பி. வேதாசலம் தலைமையில் பொதுக்கூட்டம். தோழர் இராமானுசம், கி. தங்கராஜ், என். வி. நடராசன் பேசினர்.

7-5-46 (இரண்டு கூட்டங்கள்) மயிலை திராவிடர் கழகம். மயிலை கடற்கரையில் பொதுக்கூட்டம் தோழர் ஆர். டி. சம்பந்தமூர்த்தி தலைமை வகித்தார். புலவர் தியாகராசன் தலைவர் பெரியார் சொற்பொழிவாற்றினர். தண்டையார்பேட்டைத் திராவிடர் கழக ஆதரவில் தண்டையார்பேட்டை மார்க்கட் மைதானத்தில் பொதுக்கூட்டம். தோழர் சங்கரய்யா தலைமையில் தோழர்கள் கனகபாண்டியன், அப்பாவு, ராமானுசம், பழனிச்சாமி பேசினர்.

8-5-46 (இரண்டு கூட்டங்கள்) புரசைத் திராவிடர் கழக ஆதரவில் புரசை பிரிக்கேல் கிரவுண்டில் பொதுக்கூட்டம் தோழர் அரசு தலைமையில் தோழர்கள் ராமானுசம், அப்பாவு, கே. கோவிந்தசாமி, பி. ஜகன்னாதன், ஜியார்ஜ் பேசினர். வடசென்னை திராவிடர் கழக ஆதரவில் இராயபுரம் கிரேஸ் கார்டன் மைதானத்தில் தோழர் ஆர். ராமன் தலைமையில் பொதுக்கூட்டம். தோழர்கள் கி. தியாகராசன், கிருஷ்ணசாமி, பழனிச்சாமி, என். வி. நடராசன் பேசினர்.

9-5-46 பெரம்பூர் திராவிடர்கழக ஆதரவில், பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷன் எதிரிலுள்ள மைதானத்தில் பொதுக்கூட்டம். தோழர் என். வி. நடராசன் தலைமையில் தோழர்கள் அப்பாவு, தியாகராசன், இராமானுசம், ஜியார்ஜ் பேசினர்.

10-5-46 பார்க்டவுன்—பெரியமேட்டு திராவிடர் கழகங்கள் ஆதரவில் பீபிள்ஸ் பார்க்கில் பொதுக்கூட்டம். தோழர் என். ஜீவரத்தினம் தலைமை வகித்தார். தோழர்கள் இராமானுசம், அப்பாவு, தியாகராசன், கே. கோவிந்தசாமி, எம்.கே.டி. சுப்ரமண்யம், ஜகன்னாதன் பேசினர்.

சென்னை ஜில்லா திராவிடர் கழகம், கிளைக் கழகங்கள் சார்பில் மாணவத் தோழர்களுக்குத் தோழர் என். வி. நடராசன் நன்றிகூறி மலர் மாலைகளும், கதர்ப்புத்துணி மாலைகளும் அணிவித்து 12நாட்களாக மாணவத் தோழர்கள் ஆற்றிய அரிய சொற்பொழிவுகளையும், சேவையையும் பாராட்டினார்.

## பூப்பந்தாட்டம்

தஞ்சை பன்னீர் செல்வம் பூப்பந்தாட்ட நிலையம் நேஷனல் டபீர்குளம் ரோட்டிலுள்ள மாரியப்ப நாடார் கிரவுண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பவிழாவை முன்னிட்டு குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடையனுப்பப்பட்டது.

## திராவிடமாணவர் மாகாண மாநாடு வரவு செலவு

நன்கொடை, பிரதிநிதி டிக்கட் வசூல் ரூ. 1520-4-0, சாப்பாடு டிக்கட் வசூல் ரூ. 806-0-0 ஆக ரூ. 2326-4-0. செலவு ரூ. 2124-9-3, பாக்கி இருப்பு ரூ. 201-10-9. மேலும் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தாம் வசூலித்த நன்கொடை ரூ. 100 மத்திய திராவிட மாணவர் கழகத் தலைவர் தோழர் ஈ. வி. கே. சம்பத்திடம் கொடுப்பதாகக் கூறியுள்ளார், இப்பொழுது கையிருப்பு பாக்கி ரூ. 201-10-9.

மாநாடு நடத்த முழு பொறுப்பேற்றுக்கொண்டு கஷ்டப்பட்ட சீடாமங்கலம் சுயமரியாதைச் சங்கத்தார் அவர்கள் கட்டிட நிதிக்கு கொடுக்க கேட்டுள்ளனர்.

அது விஷயமாக விரைவில் காரியக்கமிட்டி தீர்மானிக்கும்.

## மறைவு

தர்மபுரி வனசால் ஹோட்டல் சொந்தக்காரரும் நம் இயக்கப் பிரமுகருமான தோழர் D. N. நஞ்சப்பா அவர்கள் 1-6-46ல் மாரடைப்பால் மரணமானார்.

---

Edite, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.